22.02.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடரப்பட்டது. (ஒ.எஸ்.எண்.143/2019) திரு.இராமசுப்பு.

முதல் விசாரணை தொடர்ச்சி–

| | |
|---|---|
| 1 | சர்வே எண்.302/1க்கான இணைதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்பட்ட 1226 பட்டா வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | சர்வே எண்.302/1க்கான 'அ'பதிவேடு நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 07.07.1982ம் தேதியில், வீரப்ப நாயக்கர் தனது மகள் கோதை நாச்சியாருக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 06.03.2019ம் தேதியில், சுப்பாராஜுக்கு முருகன் மனைவி அச்சம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 08.06.2019ம் தேதியிட்ட கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்கச்சான்று வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 01.05.1948ம் தேதியில் சங்கரப்ப நாயக்கர் எழுதிக்கொடுத்த பதிவு பாகவிடுதலை ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 24.11.2021ல் சர்வே எண்.302/1க்கு 1ம் வாதியின் பெயரில் உள்ள பயிர்காப்பீட்டுக்கான ஆவணம் மற்றும் சாகுபடி அடங்கல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணை – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
22.02.2024.